//மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

ந.க. எண்.56703 / அ4 / இ1 / 2023, நாள். 21.09.2023.

*****

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்று - தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கலந்தாய்வு நடத்தி நியமன ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : சென்னை-3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுச் செயலாளரின் கடிதம் எண். 1975/PSD.C2/2023, நாள். 25.08.2023.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 673 இளநிலை உதவியாளர் பட்டியல், பார்வையில் காணும் கடிதத்தின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது. பணிநாடுநர்களுக்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கலந்தாய்வு நடைபெற உள்ளதால், பணிநாடுநர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள நாளில் கலந்தாய்வில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | கலந்தாய்வு நடைபெறும் நாள் | தேர்வாணைய பட்டியல் வரிசை எண். **காலை 8 மணி (முற்பகல்)** | தேர்வாணைய பட்டியல் வரிசை எண். **நண்பகல் 12 மணி (பிற்பகல்)** | கலந்தாய்வு நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 25.09.2023 | 1 - 175 வரையுள்ள பணிநாடுநர்கள் | 176 - 322 வரை மற்றும் 324 - 351 வரையுள்ள பணிநாடுநர்கள் | Madras Christian College Boys Higher Secondary School, Chetpet, Chennai - 31 |
| 2 | 26.09.2023 | 352 - 438 மற்றும் 440-526 வரையுள்ள பணிநாடுநர்கள் | 527 - 641, 643-664, 666-667 மற்றும் 669-678 வரையுள்ள பணிநாடுநர்கள் | |

இத்துடன் பணிநாடுநர்களின் பெயர் விவரப் பட்டியல் இணைத்து அனுப்பப்படுகிறது. நியமன அலுவலர்களான முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் நிருவாக வரம்புக்குட்பட்ட பணிநாடுநரின் விவரங்களைக் கண்டறிந்து பட்டியல் தயார் செய்து, அப்பணிநாடுநர்களுக்குக் கலந்தாய்வு நடைபெற உள்ள விவரங்களைக் குறிப்பிட்டு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும். தங்கள் ஆளுகைக்குட்பட்ட பணிநாடுநர்கள் அனைவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டதை சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களால் உறுதி செய்யப்பட வேண்டும்.

மேலும் 27.09.2023 அன்று பணிநாடுநர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட உள்ளதால் அந்நாள் வரை பணிநாடுநர்கள் தங்கள் சொந்த செலவில் தங்கும் வசதி மற்றும் இதர வசதி ஏற்பாடு செய்து கொள்ளவும் முதன்மைக் கல்வி அலுவலர்களால் அறிவுறுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் விவரங்களை அனைத்து பணிநாடுநர்களுக்கும் தெரிவிக்கப்பட்டதையும் மற்றும் எந்த ஒரு பணிநாடுநரும் விடுபடவில்லை என்பதையும் உறுதி செய்யுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு :**

673 பணிநாடுநர்களின் விவரப் பட்டியல்

21/09/2023

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

21/9/23